மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்கான திட்டங்கள் போட்டு கார்ப்பரேஷன்மூலம் வடிகால் எல்லாம் தயார்செய்து விரைவில் நாற்றம் நீக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : கூவம் நதிக் கரை ஓரங்களில் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டுவதுபற்றிச் சொல்லப்பட்டது. என்.ஜி.ஓ.-க்களுக்காக நந்தனத்தில் கட்டப்பட்ட பல மாடிக் கட்டடம் பழுதடைந்திருக்கிறதே, அதைப் பழுதுபார்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சியை மேற்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : எங்கெங்கு பழுது ஏற்பட்டாலும் அவற்றை உடனடியாகப் பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் அதற்கான அதிகாரிகளை எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வேலை நடந்துகொண்டுமிருக்கிறது.

குடிசைமாற்றுப் பணிகளுக்கு உலக வங்கி உதவி

* 320. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைமாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் உள்ள பகுதிகளில் சாலை வசதி, குழாய் வசதி, விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கென 1975–76 ஆம் ஆண்டில் உலக பாங்கு நிறுவனம் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Conference of Labour Ministers.

* 321. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state :

(a) whether the Central Government have invited the State Government during July 1975 to participate in the All India Labour Ministers' Conference to discuss ways and means to abolish the practice of bonded labour and redemption of debts attached to its victims; and

(b) If so, the details of the same?